Australian Government

Department of Home Affairs

# Information to be provided to a detainee about identification tests

# காவலில் வைக்கப்பட்டுள்ள ஒருவருக்கு அடையாள சோதனைகளைப் பற்றிய தகவல்களை வழங்குதல்

Form **1247i TAM** TAMIL

*Migration Act 1958* (*குடியேற்றச் சட்டம் 1958*)-இன்படி அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஒருவர் குடிவரவு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள குடிமகன் அல்லாத ஒருவரைப் பின்வரும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சொந்த அடையாளங்களைத் தரவேண்டுமெனக் கேட்கலாம்:

- அந்த நபரின் கைவிரல்ரேகை அல்லது கைத் தடங்கள் (காகிதம் மற்றும் மை அல்லது டிஜிடல் நேரடி ஸ்கேனிங் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி எடுக்கப்பட்டவை உட்பட)
- அந்த நபரின் உயரம் மற்றும் எடை அளவுகள்
- அந்த நபரின் முகம் மற்றும் தோள்கள் வரையிலான ஒரு புகைப்படம் அல்லது வேறு பிம்பம்
- அந்த நபரின் கையொப்பம்
- குடியேற்ற விதிமுறைகள் 1994-இல் குறிப்பிடப்பட்டுள்ள வேறு ஏதாவது வகையிலான சொந்த அடையாளம்

**குறிப்பு:** எவ்வகைச் சொந்த அடையாளத்தை (அடையாளங்களை) குடிமகன் அல்லாதவர் வழங்க வேண்டுமெனத் தீர்மானிக்க வேண்டியது அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியாகும்.

உங்கள் அடையாளத்தை மதிப்பீடு செய்வதில் உதவிபுரிய ‘உள்நாட்டு விவகாரத் திணைக்கள’ (‘திணைக்களம்’)த்துக்கு ஒருவரைப் பற்றிய சொந்த அடையாளங்கள் தேவைப்படுகின்றன.

## ‘திணைக்களம்’ உங்களது சொந்த அடையாளத்தை (அடையாளங்களை) எவ்வாறு பெறும்?

‘புலப்பெயர்வு சட்ட’த்தின் கீழ், கொடூரமான, மனிதத் தன்மையற்ற அல்லது கீழ்த்தரமான விதத்தில், அல்லது ஒருவரை மனிதாபிமானத்துடனும், மானிட கௌரவத்துடனும் நடத்தத் தவறும் விதத்தில் ஆள்-அடையாளச் சோதனையைச் செய்யக்கூடாது என்பது கட்டாயமாகும்.

### அடையாளப் பரிசோதனை பின்வரும் சூழ்நிலைகளில்தான் நடத்தப்படுகிறது:

- அடையாளப் பரிசோதனை நடத்தக் குடியேற்றச் சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால்;[1]
- நீங்கள் கேட்டுக்கொண்டால், உங்கள் பாலினத்தைச் சேர்ந்த, அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால்;
- நீங்கள் விரும்பினால், சுயேச்சையான நபர் ஒருவரின் முன்னிலையில்: அத்துடன் சுயேச்சையான நபர் அந்த இடத்தில் உடனடியாகக் கிடைத்து, சரியான நேரத்துக்குள் வர விருப்பம் தெரிவிக்க வேண்டும் (நீங்கள் உரிய வயதடையாத இளவலாக இருந்தால் உங்கள் பெற்றோரோ, காப்பாளரோ அல்லது சுயேச்சையான நபரோ உடனிருக்க வேண்டும்);[2]
- நியாயமான நிர்ப்பந்தம் கொடுக்க வேண்டியிருந்தால், சுயேச்சையான நபர் உடனிருக்க வேண்டும்;
- உங்களுக்கு நியாயமான தனிமை கிடைக்கக்கூடிய சூழ்நிலைகளில்.

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியைத்தவிர மற்றவர்கள் எவரும் உடனிருக்க வேண்டியிருந்தால், எதிர்பாலைச் சேர்ந்த ஒரு நபர் உடனிருக்கும்போது அல்லது அவர் முன்னிலையில் நடைபெற வேண்டியிருக்கும்போது நீங்கள் வேண்டிக்கொண்டால், அந்த வேண்டுதலை நடைமுறைப்படுத்த முடியுமானால் இந்த அடையாளப் பரிசோதனை மேற்கொள்ளப்படாது.

### கூடுதலாக:

- சில சூழ்நிலைகளில், அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி இந்த அடையாளப் பரிசோதனையை வீடியோ ஒளிப்பதிவு செய்யலாம்;
- அடையாளப் பரிசோதனையை நடத்தும் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி மற்றொரு அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியையோ அல்லது மற்றொரு அதிகாரியையோ இந்த பரிசோதனையில் தனக்கு உதவிபுரியச் சொல்லிக் கேட்கலாம்.

## மறுபரிசோதனை

நீங்கள் ஏற்கனவே கொடுத்த சொந்த அடையாளங்கள் பயன்படுத்தப்பட முடியாமல் போனாலோ அல்லது அந்த சொந்த அடையாளங்களின் நம்பகத்தன்மையில் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிக்கு திருப்தி இல்லாமல் போனாலோ நீங்கள் ஒரு அமர்வில் ஒன்றுக்கு மேற்பட்ட சமயங்களில் அதைப்போல சொந்த அடையாளங்களை வழங்கவேண்டியிருக்கலாம்.

வேறொரு சமயத்தில் அதைப்போல சொந்த அடையாளங்களை மறுபடியும் நீங்கள் வழங்கவேண்டியிருக்கலாம்.

ஏனென்றால் பரிசோதனை நடத்தப்பட்டுக்கொண்டிருக்கும்போது அல்லது உடனடியாக அதற்குப் பிறகு அந்த சொந்த அடையாளங்கள் பயன்படாமல் போகும் என்பது தெளிவாகத் தெரியாமலிருந்திருக்கலாம். அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி மறுபரிசோதனைக்காக ஒரு அங்கீகரிக்கப்பட்ட மூத்த அதிகாரியிடமிருந்து அங்கீகாரம் பெற வேண்டியிருக்கும்.

## மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவரைப் பெறல்

அடையாளப் பரிசோதனை சம்பந்தப்பட்ட தகவல்களைப் புரிந்துகொள்வதில் உங்களுக்கு உதவிபுரிய, தேவைப்பட்டால் மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவர் உங்களுக்குக் கிடைக்க ஏற்பாடு செய்து தரப்படும். மொழிபெயர்த்துரைப்பாளர் சேவை தொலைபேசி மூலமாகவும் வழங்கப்படலாம்.

## சொந்த அடையாளங்களைத் திணைக்களம் எதற்காகப் பெறுகிறது?

குடியேற்றச் சட்டம் மற்றும் குடியேற்ற விதிமுறைகள் 1994-இன் அடிப்படையில் திணைக்களம், பின்வருவன உள்ளிட்ட (இவை மட்டுமல்ல மேலும் இருக்கலாம்) பல்வேறு காரணங்களுக்காகச் சொந்த அடையாளங்களைச் சேகரிக்க அதிகாரம் கொண்டுள்ளது:

- அடையாளங்கள் மற்றும் அடையாளங்காண்பதை உறுதிப்படுத்துதல்;
- விசா விண்ணப்பங்களையும் மற்றும் பாதுகாப்புக் கோரிக்கைகளையும் தீர்மானிப்பதற்கான திணைக்களத்தின் நடைமுறைகளை மேம்படுத்துதல்;
- குற்ற வரலாறு கொண்ட ஆஸ்திரேலியக் குடியுரிமை அல்லாதோர் அல்லது தேசிய பாதுகாப்பு அல்லது குணாதிசயத்தில் பிரச்சினை உள்ளோரை அடையாளம் காண்பதற்கான திணைக்களத்தின் திறனை மேம்படுத்துதல்;
- குடிவரவு சம்பந்தப்பட்ட விடயங்களில் அடையாளம் மற்றும் ஆவண மோசடிகளை முறியடித்தல்;
- பாதுகாப்பு வேண்டுமென்ற கோரிக்கையுடன் பாதுகாப்பு விசாவிற்காக விண்ணப்பித்தவர்கள் அல்லது கடல்வழி நுழைவோர் ஆஸ்திரேலியாவில் வந்திறங்குதற்கு முன்பு பாதுகாப்பு பெறுவதற்குத் தேவையான வாய்ப்புகள் அவர்களுக்குக் கிடைத்தனவா என்பதை தெரிந்து கொள்ளுதல்;
- திருப்பி அனுப்பப்பட்டோர் மற்றும் நாடு கடத்தப்பட்டோர்களின் அடையாளங்களை அவர்களின் தாய் நாடுகளுக்குத் தெரிவித்தல்.

## உங்கள் அந்தரங்கம்

திணைக்களம் உங்களது அந்தரங்கத்தை மதிக்கிறது. உங்களைப் பற்றிய தகவல்கள் பயன்படுத்தப்படும் முறையானது உங்கள் வாழ்க்கையை எவ்வாறு பாதிக்கக்கூடும் என்பதை திணைக்களம் நன்கு அறியும். திணைக்களம் வைத்திருக்கும் தகவல்கள் துல்லியமானதாகவும், இன்றைய தேதிக்கு சரியானதாகவும், தேவையானதாகவும் இருப்பது அவசியம். தகவல்கள் எதற்காகச் சேகரிக்கப்பட்டதோ அந்தக் காரணத்துக்காகத்தான் பயன்படுத்தப்பட வேண்டுமென்பதும் அவசியம்.

தனிப்பட்டவர்களை அடையாளம் கண்டறியும் தகவல்களை சேகரிப்பது, அணுகுவது, சேமித்து வைப்பது, வெளியிடுவது போன்றவைகளில் பாதுகாப்பு ஏற்பாடுகள் உள்ளன. உங்கள் சொந்தத் தகவல்கள் பாதுகாப்பாகவும், இரகசியமாகவும் வைக்கப்படுவதை உறுதிப்படுத்தும் வகையில் திணைக்களத்தின் செயல்பாடுகள் கண்காணிக்கப்படுகின்றன.

## அந்தரங்கப் பாதுகாப்பைப் பற்றிய முக்கியத் தகவல்கள்

ஒருவரைப் பற்றிய தகவல்களைத் ‘திணைக்களம்’ திரட்டும் மற்றும் கையாளும் விதத்தினைக் கட்டுப்படுத்தும் 13 ‘ஆஸ்திரேலியத் தகவல் பாதுகாப்புக் கொள்கைகள்’ *‘தகவல் பாதுகாப்பு சட்டம் 1988’*-இல் அடங்கியுள்ளன. தனது அத்தியாவசியமான செயல்பாடுகளுக்காக ஒருவரைப் பற்றிய தகவல்களைத் ‘திணைக்களம்’ எவ்வாறு திரட்டும், பயன்படுத்தும் மற்றும் வெளிப்படுத்தும் என்பதைப் பற்றிய தகவல்களை *‘தகவல் பாதுகாப்பு அறிவிப்பு’* ‘படிவம்1442i’-இல் காணலாம். தகவல்களைத் ‘திணைக்களம்’ கையாளும் பொதுவான நடைமுறைகளைப் பற்றிய மேலதிகத் தகவல்களை (‘படிவம்1442i’ உள்ளடங்க) **https://www.homeaffairs.gov.au/access-and-accountability/our-commitments/privacy** எனும் வலைத்தலப் பக்கத்திலுள்ள ‘திணைக்களத்தின் தகவல் பாதுகாப்புக் கொள்கை’யில் காணலாம்.

© COMMONWEALTH OF AUSTRALIA, 2021

## உங்கள் சொந்த அடையாள விவரங்களைத் திணைக்களம் யாரிடம் கொடுக்க முடியும்?

உங்கள் சொந்த அடையாளங்கள் மற்றும் உங்கள் பெயர், பொருத்தமான வாழ்க்கை வரலாற்று விவரங்கள் சம்பந்தப்பட்ட தகவல்கள் போன்றவற்றை சட்ட அமலாக்கம் மற்றும் சுகாதார நிறுவனங்கள் உட்பட பல்வேறு நிறுவனங்களுக்கும், மேலும் உங்கள் அடையாளத்தை திணைக்களத்துடன் சரிபார்க்க தேவைப்படும் நிறுவனங்களுக்கும் வெளிப்படுத்த திணைக்களம் அங்கீகாரம் பெற்றுள்ளது. திணைக்களம் உங்கள் சொந்த அடையாளங்களைப் பெற்றதும் அவை திணைக்களத்திடம் உள்ள உங்களுடைய அதிகாரப்-பூர்வ ஆவணத்தின் ஒரு பகுதியாக ஆகிவிடும்.

சர்வதேச உடன்படிக்கைகளுக்கு ஏற்ப பல்வேறு நாடுகளுடனும் 'திணைக்களம்' பன்னாட்டுத் தகவல் பரிமாற்றங்களில் ஈடுபட்டுள்ளது. இத்தகைய தகவல் பரிமாற்றங்களில் முகத் தோற்றங்கள், கைரேகை விவரங்கள் உள்ளிட்ட சொந்த அடையாளங்களைப் பகிர்ந்து கொள்வதும் அடங்கியிருக்கலாம். மேலதிகத் தகவல்களுக்கு **https://immi.homeaffairs.gov.au/help-support/meeting-our-requirements/biometrics** எனும் 'திணைக்களத்தினது வலைத்தலப் பக்கத்தினைப் பாருங்கள்.

அவ்வாறு நாடுகளுக்கிடையே பகிர்ந்துகொள்ளும்போது, உங்கள் சொந்த அடையாளங்கள் ஒத்துவரும் பட்சத்தில், உங்கள் வாழ்க்கை வரலாறு விவரங்கள், பிரயாண மற்றும் பிற அடையாள ஆவணங்களின் பிரதிகள் அல்லது அத்தகைய ஆவணங்களிலுள்ள விவரங்கள், உங்கள் குடிவரவுத் தகுதிநிலை மற்றும் குடிவரவு வரலாறு (இதில் குடிவரவைத் தவறாகப் பயன்படுத்தல் மற்றும் குடிவரவுசார்ந்த குற்றங்கள் போன்றவை அடங்கும்) அத்துடன் குடிவரவு நோக்கங்கள் சம்பந்தப்பட்ட குற்ற வரலாற்றுத் தகவல்கள் ஆகியவற்றை திணைக்களம் வெளிப்படுத்தும். அத்தகைய வெளிப்படுத்தலின் நோக்கம் உங்கள் அடையாளத்தை உறுதிப்படுத்தவும், நீங்கள் திணைக்களத்துக்கும், மற்ற நிறுவனங்களுக்கும் அதே அடையாளத்தின் கீழ் அதைப்போன்ற கோரிக்கைகளை வழங்கியிருக்கியிருக்கிறீர்களா என்பதை உறுதி செய்து கொள்ளவும் ஆகும்.

உங்கள் சொந்த அடையாளங்களை வெளியிடுவது தொடர்பான சூழ்நிலைகளைப் பற்றிய மேலும் விரிவான தகவல்கள் 'திணைக்கள'த்தின் **https://immi.homeaffairs.gov.au/help-support/departmental-forms** எனும் வலைத்தலப் பக்கத்தில் கிடைக்கும் தகவல் படிவம் 1243i *Your personal identifying information* (உங்கள் சொந்த அடையாளத் தகவல்கள்) -ஐ நீங்கள் வாசிக்க வேண்டும்.

## நியாயமான நிர்ப்பந்தம் கொடுத்தல்

அடையாளப் பரிசோதனையை மேற்கொள்ள ஏதுவாக அல்லது சொந்த அடையாளமோ, சொந்த அடையாளத்திலிருந்து பெறப்பட்ட அர்த்தமுள்ள அடையாளமோ இழப்பு, அழிவு அல்லது மாசுபடுவதைத் தடுக்கும் வகையில் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி நியாயமான நிர்ப்பந்தம் கொடுக்கலாம்.

இருப்பினும், நீங்கள் 18 வயதுக்குக் குறைந்த, இளவயதினராய் இருந்தாலோ, இயலா நபராய் இருந்தாலோ அல்லது உங்களிடம் கேட்கப்படும் சொந்த அடையாளம் உங்கள் கையெழுத்தாக இருந்தாலோ நிர்ப்பந்தம் கொடுக்கப்பட மாட்டாது.[3]

பின்வரும் காரணங்களைத் தவிர மற்றவற்றிற்கு நிர்ப்பந்தம் கொடுக்கப்பட மாட்டாது:

- அடையாளப் பரிசோதனை நடத்துவதற்கு நீங்கள் அனுமதியளிக்க மறுத்திருந்தால்;
- நிர்ப்பந்தம் கொடுக்காமல் அடையாளப் பரிசோதனையை நடத்துவதற்கான நியாயமான முயற்சிகள் அனைத்தும் முடியாமல் போனால்; மற்றும்
- அடையாளப் பரிசோதனை நடத்துவதற்காக நிர்ப்பந்தம் கொடுக்கும்படி அங்கீகரிக்கப்பட்ட மூத்த அதிகாரியினால் அங்கீகாரம் அளிக்கப்பட்டால்.[4]

## உங்கள் உரிமைகள்

'ஆஸ்திரேலியத் தகவல் பாதுகாப்புக் கொள்கைக'ளில் சொல்லப்பட்டுள்ள எமது கடப்பாடுகளைத் 'திணைக்களம்' மீறும் விதத்தில் உங்கள் தனிப்பட்ட தகவல்கள் கையாளப்பட்டுள்ளன என்று நீங்கள் நினைத்தால், தகவல் பாதுகாப்பு முறைப்பாடு ஒன்றை நீங்கள் பின்வரும் வழியில் செய்யலாம்:

**https://www.homeaffairs.gov.au/help-and-support/departmental-forms/online-forms/complaints-compliments-and-suggestions** எனும் வலைத்தலப் பக்கத்தில் கிடைக்கும் இணையவழிப்-படிவத்தினை நிரப்புங்கள்.

எழுத்து மூலமாக:

Department of Home Affairs
GPO Box 241
Melbourne VIC 3001
Australia

உங்ளுடைய முறைப்பாடு விசாரிக்கப்பட்டு அதன் முடிவு உங்களுக்கு அறிவிக்கப்படும். 'திணைக்கள'த்தின் மறுமொழியில் உங்களுக்குத் திருப்தி இல்லை என்றால், 'ஆஸ்திரேலியத் தகவல் பாதுகாப்பு ஆணையர் அலுவலக' (Australian Information Commissioner (OAIC))த்திடம் நீங்கள் முறைப்பாடு ஒன்றைச் சமர்ப்பிக்கலாம். OAIC -யிடம் எவ்வாறு தகவல் பாதுகாப்பு குறித்த முறைப்பாடு ஒன்றைச் சமர்ப்பிப்பது, மற்றும் தகவல் பாதுகாப்பு குறித்த முறைப்பாடுகளை OAIC எவ்வாறு ஆய்வு செய்து அவற்றிற்குத் தீர்வு காணும் என்பதைப் பற்றிய மேலதிகத் தகவல்களுக்கு OAIC -இனது பின்வரும் வலைத்தலப் பக்கத்திற்குச் செல்லுங்கள் **https://www.oaic.gov.au/privacy/privacy-complaints/lodge-a-privacy-complaint-with-us/** அல்லது OAIC -யுடன் 1300 363 992 எனும் இலக்கத்தில் தொடர்புகொள்ளுங்கள் (திங்கள் முதல் வியாழன் – காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை -AEST/AEDT).

அல்லது **www.ombudsman.gov.au/contact** எனும் 'அரச-குறை கேட்பாள'ரது வலைத்தலப் பக்கத்திலுள்ள இணையவழிப் படிவம் மூலமாக 'பொதுநல அரசு குறைகேட்பாளர் அலுவலக'(Commonwealth Ombudsman's Office)த்திற்கு நீங்கள் எழுதலாம்.

அல்லது 1300 362 072 எனும் இலக்கத்தில் இலவச அவசர இணைப்பினை அழையுங்கள்.

| | |
|---|---|
| ***முகப்புப் பக்கம்*** | **www.homeaffairs.gov.au** |
| ***பொது விசாரணை இணைப்பு*** | ஆஸ்திரேலியாவில் அலுவலக நேரங்களில் தொலைபேசி இயக்குபவரிடம் பேச **131 881** என்ற எண்ணுக்கு தொலைபேசியில் அழையுங்கள் (இது தவிர்த்த நேரங்களில் பதிவு செய்யப்பட்ட தகவல்கள் கிடைக்கும்). நீங்கள் ஆஸ்திரேலியாவுக்கு வெளியே இருந்தால், தயவுசெய்து உங்கள் அருகிலிருக்கும் ஆஸ்திரேலிய தூதரக அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுங்கள். |

---

[1] குடியேற்றச் சட்டம் (s.5(1)) -இன் படி, ஒரு 'அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி' என்பவர் 'அந்த ஏற்பாட்டு நோக்கங்களுக்காக அமைச்சர் அல்லது செயலாளரினால் எழுத்து வடிவில் அங்கீகாரம் கொடுக்கப்பட்ட' அதிகாரி. குடியேற்றச் சட்டம் (s.5(1)) -இன் படி, ஒரு 'அதிகாரி' என்பவர்:

i எழுத்து வடிவில் அமைச்சரினால் குறிப்பிடப்பட்ட அதிகாரி அல்லாத திணைக்களத்தின் ஒரு அதிகாரி; அல்லது

ii எழுத்து வடிவில் அமைச்சரினால் குறிப்பிடப்பட்ட நபர் அல்லாத ஒரு நபர். அவர்:

(அ) *Customs Act 1901 (சுங்கத்துறைச் சட்டம் 1901)* நோக்கங்களுக்கான ஒரு அதிகாரி; அல்லது

(ஆ) *Australian Protective Service Act 1987 (ஆஸ்திரேலியப் பாதுகாப்புச் சேவைச் சட்டம் 1987)* நோக்கங்களுக்கான ஒரு பாதுகாப்புச் சேவை அதிகாரி;

(இ) ஆஸ்திரேலிய மத்தியக் காவல்துறை அல்லது மாநில அல்லது பிரதேச காவல்துறையில் ஒரு அங்கத்தினர், அல்லது

(ஈ) இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக அமைச்சரால் ஒரு அதிகாரி என்று எழுத்து வடிவில் அங்கீகரிக்கப்பட்ட எந்த ஒரு நபர்; அல்லது

(உ) குடியேற்ற சட்டத்தின் நோக்கங்களுக்காக, அமைச்சரால் அதிகாரிகள் என்று எழுத்து வடிவில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு குழுவில் உள்ளடங்கிய எந்த ஒரு நபருமாவார், அத்துடன் அந்தக் குழுவில் அங்கீகாரம் கொடுத்தபின் அங்கத்தினராகும் நபரும் அதில் அடங்குவார்.

[2] குடியேற்றச் சட்டம் (s.5(1)) -இன் படி, ஒரு 'சுயேச்சையான நபர் என்பவர் பின்வரும் குணாதிசயங்களைக் கொண்ட 'நபர்'(அதிகாரி அல்லது அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அல்லாத):

(அ) சொந்த அடையாளங்களைத் தரும் அல்லது தரப்போகும் குடியுரிமை அல்லாதோரின் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்தக்கூடியவர்; மற்றும்

(ஆ) சொந்த அடையாளங்களைத் தரும் அல்லது தரப்போகும் குடியுரிமை அல்லாதோரால் கூடுமான வரை நடைமுறைக்கு ஏற்றபடி ஒத்துக்கொள்ளப்படுபவர்; மற்றும்

(இ) குடியுரிமை அல்லாதோர் உரிய வயதடையாத இளவலாயிருந்தால், அவர்களுடைய நலனை முன்னிட்டுப் பிரதிநிதித்துவம் அளிக்கக்கூடியவர்.

[3] குடியேற்றச் சட்டம் (s.5(1)) -இன் படி, ஒரு 'இயலாத நபர்' என்பவர் 'சொந்த அடையாளத்தை அளிக்க வேண்டிய தேவையின் பொதுவான தன்மை, விளைவு மற்றும் நோக்கங்களைப் புரிந்துகொள்ளும் தன்மையில்லாத' நபர்.

[4] குடியேற்றச் சட்டம் (s.261AK(10)) -இன் படி, ஒரு 'அங்கீகாரம் அளிக்கும் மூத்த அதிகாரி' என்பவர் 'செயலாளரால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அல்லது அங்கீகாரம் அளிக்கும் மூத்த அதிகாரி ஒருவரின் பணிகளைச் செய்ய செயலாளரால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிகளின் குழுவில் உள்ள ஒருவராவார்'.


© COMMONWEALTH OF AUSTRALIA, 2021